[1975 அக்டோபர் 28

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அவர் களிடத்தில் கலந்து பேசியதில் மருந்துக்கு ஒரு சிறு கட்டண உயர்வுக்கு அனுமதிக்க வேண்டுமென்று கேட்டார்கள். அதைச் சட்டப்படி ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இரவு நேரத்தில் பணியாற்றுகிறவர்களுக்குப் பணி செய்கிறவர்கள் சட்டம் இருக் கிறதே, அதில் சில தடைகள் இருக்கின்றன. இதைப் பற்றி லேபர் கமிஷனர் அவர்களுக்குத் தெரிவித்து இதற்கு விதி விலக்கு அளிக்குமாறு கேட்கப்பட்டிருக்கிறது. அது முடிவாகவில்லை. சூப்பர் மார்க்கெட்கள் பொதுமக்களின் நன்மைக்காக நடத்தப்படு கின்றவை. எங்கெங்கே இரவு நேரங்களில் வைக்க வசதி இருக் கிறதோ அந்த இடங்களில் மருந்து வினியோகத்தை மேற் கொள்ள வேண்டுமென்று நானும் இந்த நேரத்தில் ஆலோசனை யாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Transportation Plan for Coimbatore.

* 94 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Health be pleased to state :

(*a*) whether the traffic and transportation studies to evolve a suitable transportation plan for Coimbatore have been completed; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆய்வுகள் இன்னமும் நடந்து வருகின்றன.

(இ) கோயம்புத்தூர் பெருநகர்ப் பகுதிக்கான பயணப் போக்குவரவு, சரக்கேற்றுப் போக்குவரத்து ஆய்வுபற்றிய அடங்கல் திட்டத்தைத் தயாரிப்பதற்கான பல்வேறு ஆய்வுகளை தமிழக அரசு நகர—நாட்டுப்புற அமைப்பு இயக்குநர் அலுவலகத்தைச் சேர்ந்த சிறப்பாய்வுப் பிரிவு ஒன்று நடத்தி வருகிறது. இப்பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட கோயம் புத்தூர் பெருநகரப் பகுதியின் பரப்பு 760.76 சதுர கிலோ மீட்டராகும். இதில் கோயம்புத்தூர், சிங்காநல்லூர் நகராட்சி களும், கோயம்புத்தூர் நகரைச் சுற்றியுள்ள சிறந்த நகர்ப்புறப் பகுதிகளான பெரியநாயக்கன்பாளையம், கணபதி, குறிச்சி, குனியமுத்தூர், மதுக்கரை ஆகியவையும் அடங்கும்.

1975 அக்டோபர் 28]

திரு. என். கே. பழனிசாமி: தலைவரவர்களே, இப்போது கோயம்புத்தூரை கார்ப்பரேஷனுக மாற்றியிருக்கிறார்கள். ஆகவே இந்தத் திட்டம் மிகவும் அவசியமும், அவசரமுமாக இருக்கிறது. லாரிப் போக்குவரத்து, பஸ் போக்குவரத்து இவைகளை எந்தெந்த முறையில் மாற்றியமைக்க வேண்டுமென்று இந்தக் குழு சர்க்காருக்கு ஆலோசனை சொல்லியிருக்கிறதா? அதன் விவரம் என்னவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, எதையும் மாற்றுவதற்கு முன்னாலே, உண்மையான நிலவரம் என்ன என்பதைப் பற்றிய புள்ளி விவரத்தைச் சேகரிக்கவேண்டும். இப்படிப் புள்ளி விவரங்களை ஏராளமாகச் சேகரித்த பின்னால் புள்ளி விவரங்களை கம்ப்யூட்டருக்குக் கொடுத்து இவைகளை ஒழுங்குபடுத்திப் போக்குவரத்து நெரிசல் எந்தப் பகுதியில் வளரும், எங்கே வளருவதற்கு வாய்ப்பு இருக்கிறது, எங்கே வாய்ப்பாக இருக்கும், என்ன இடத்தில் என்ன மாற்றம் செய்ய வேண்டுமென்று விரிவாக ஆராயவேண்டும். புள்ளிவிவரங்களை தொகுக்கிற பணி முடிந்த பிறகு ஆராயவேண்டிய கட்டாயம் இருக்கிறது. இது ஒரு ஆண்டு ஆனாலும் ஆகும். மாநகராட்சியாக இருந்தாலும், வெறும் நகராட்சியாக இருந்தாலும் இந்தக் கடமை தனிக் கடமை. இந்தக் கடமை முறைப்படி நடக்கும்.

குத்தகை தள்ளுபடி மாற்றம் குறித்த வழக்குகள்

*97 வினா—திரு. ச. சங்குமுத்து தேவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1970 முதல் 1974 வரையான காலண்டர் ஆண்டுகளில், திருநெல்வேலி மாவட்டத்தில் தாசில்தார் அவர்களிடம் குத்தகைத் தள்ளுபடி அல்லது ரெவிஷன் போட்டு மனு கொடுத்த வழக்குகள் இதுவரை எத்தனை முடிவடையாமல் இருக்கிறது?

(இ) காலதாமதத்தைத் தவிர்க்க அரசு எடுத்துக்கொண்ட முயற்சி யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) பேரவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

@ 143–145-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.